

















Sow Ing & Reap ing



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th July 2016

**Our Radio & TV Programs**
Sri Lanka Radio SW 25,41 Meter on Saturday 5.30P.M & Nambikkai TV on Monday & Saturday 7.30 P.M

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

**To**

Postman Remarks (If Undelivered):

- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi press, 14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 16 | ஜூலை 2016 | கனி 8






THE WORD OF CHRIST

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Puthuyugam TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Tuesday 6.15-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**

**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ், பவுலா பேட்ஸ் அவர்களின் செய்தி மற்றும் வேதபாடம்,
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 191

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை செப்டம்பர் மாத இதழில்!

1. எருசலேமின் அலங்கத்தை கட்டுகிறபோது எக்காளம் ஊதுகிறவன் யாரண்டையிலே நின்றான்?
2. உடனே தேவதூதர்கள் வந்து, எவருக்குப் பணிவிடை செய்தார்கள்?
3. தன் குலத்தையும், தன் பூர்வோத்தரத்தையும் அறிவிக்காதிருந்தவள் யார்?
4. பிலாத்து ஜனங்களைப் பிரியப்படுத்த மனதுள்ளவனாய் யாரை விடுதலையாக்கி எவரை சிலுவையில் அறையும்படியாக ஒப்புக்கொடுத்தான்?
5. நீதியைத் தரித்துக்கொண்டேன்; அது உடுப்பாயிருந்தது என்ற தாசன் யார்?
6. எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றவன் யார்?
7. உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே எவைகள் விழித்துக்கொள்ளும் என்கிறான் சங்கீதக்காரன்?
8. இயேசுவை சமாரியனென்றும், பிசாசுபிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே என்றவர்கள் யார்?
9. எவன்மேல் பொறாமை கொள்ளாதே, அவனுடைய வழிகளில் ஒன்றையும் தெரிந்து கொள்ளாதே என வேதம் போதிக்கிறது?
10. எவனுக்கு நம்முடைய பிதாக்கள் கீழ்ப்படிய மனதாயிராமல், அவனைத் தள்ளி விட்டு, தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பினார்கள்?

### போட்டியாளர்கள் கவனிக்க...

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்கிறவர்கள் இதழை படிக்க விருப்பமில்லாதவர்களுடைய முகவரிகளை எழுதி அனுப்பவேண்டாம். நன்றி. – ஆசிரியர்

### இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும் 9

நாள்: ஜுலை 30 -ம் தேதி, சனிக்கிழமை
நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 2.00 மணி வரை
கிறிஸ்துவின் சபையார் கூடமிடம்
1/22 மேட்டுப்பட்டி தாதனூர் -636 101
சேலம் மாவட்டம்
ஊழியர்: னு.பூபதி
தொடர்புக்கு 8754806899



- இது உருண்டை வடிவ உடலும் குட்டை வாலும் உடைய பழுப்பு நிற பறவை.
- இது வேகமானதும் கௌதாரியைக் காட்டிலும் திறமைமிக்கதுமான பறவை.
- ஐரோப்பாவில் எங்கும் வெகு அருகாமையிலே காணக்கூடிய பறவை.
- வெவ்வேறு பழுப்பு மற்றும் கருப்பு வண்ணத்தினை இதன் பின்பகுதியிலும் அடிப்பகுதியில் இலேசான இறகுகளைக் கொண்டதுமான விரைவாக ஓடக்கூடிய பறவை இது.
- கர்த்தர் இஸ்ரவேலருக்கு வனாந்தரத்தில் இப்பறவையினை உணவாகப் புசிக்கக் கொடுத்தார் (யாத்.16:9-13).
- இப்பறவை நம்நாட்டிலும் காணப்படுகிறது.




Quail

சிறுவர் பகுதி

# ஞானதிஷ்டிக்காரன்

*வேதபகுதி: 1 சாமுவேல் 9:6-13*



ஞானதிஷ்டிக்காரன் என்றால் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? தீர்க்கதரிசிகளே முற்காலத்தில் ஞானதிஷ்டிக்காரன் என்று அழைக்கப்பட்டனர். சவுலும் அவனுடைய வேலைக்காரனும் தன்னுடைய தகப்பனின் கழுதையைத் தேடிப் போனார்கள். பல நாடுகளில் தேடியும் கழுதை காணப்படவில்லை சூப் என்னும் நாட்டிற்கு வந்தபோது வேலைக்காரன் இதோ, இந்தப் பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார்; அவர் பெரியவர்; அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும்; அங்கே போவோம்; ஒரு வேளை அவர் நாம் போக வேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பார் என்றான்.

அப்பொழுது சவுல் தன் வேலைக்காரனைப் பார்த்து; நாம் போனாலும் அந்த மனஷனுக்கு என்னத்தைக் கொண்டுபோவோம்; நம்முடைய பைகளில் இருந்த தின்பண்டங்கள் செலவழிந்து போயிற்று; தேவனுடைய மனுஷனாகிய அவருக்குக் கொண்டு போகத்தக்க காணிக்கை நம்மிடத்தில் ஒன்றும் இல்லையே என்றான். அதற்கு அந்த வேலைக்காரன் என்ன சொன்னான் தெரியுமா? இதோ, என் கையில் இன்னும் கால் சேக்கல் வெள்ளியிருக்கிறது; தேவனுடைய மனுஷன் நமக்கு நம்முடைய வழியை அறிவிக்கும்படிக்கு, அதை அவருக்குக் கொடுப்பேன் என்றான்.

அன்பான தம்பி தங்கைகளே கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்ற வசனத்தின்படி வெறுங்கையாக தேவ மனிதனை சந்திக்க விருப்பமில்லாது, யோசனை செய்து தன்னிடத்திலிருந்த விலையேறப்பெற்ற கால்சேக்கல் வெள்ளியை ஞானதிஷ்டிக்காரனாகிய சாமுவேலுக்குக் கொடுக்க முன்வந்த அந்த வேலைக்காரனை சற்று யோசித்துப்பாருங்கள். நீங்கள் உங்கள் சபை போதகரை சந்திக்கும்போது வெறுங்கையோடே செல்கிறீர்களா? அல்லது அவர் நமக்கு ஏதாவது கொடுப்பார் என்ற ஏக்கத்தோடு செல்கிறீர்களா? தேவ மனிதன் தேவனுடைய வார்த்தைகளையே கொடுப்பான். நீங்கள்தான் பொருட்களினால் அவர்களை கனப்படுத்தவேண்டும். இதற்கு சவுலும் அவன் வேலைக்காரனும் நமக்கு நல்ல முன்மாதிரி. புதிய ஏற்பாட்டிலும் அநேகர் பவுல் போன்றோரை தங்கள் பொருட்களினால் கனப்படுத்தியதை நாம் வாசிக்கின்றோம்.

**மனப்பாட வசனம்:** *"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்" (லூக்கா6:38)*

Contact: 94435 58041

**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**



திவேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 16 ஜூலை -2016 கனி - 8

ஆசிரியருரை

## ஓ, தாகமாயிருக்கிறவர்களே

## Ho! Everyone Who Thirsts



தாகமாயிருக்கிறவர்களுக்கு கர்த்தர் ஜீவத்தண்ணீரைக் கொடுக்கிறார். ஆண்டவராகிய இயேசு இப்பூமியில் ஊழியம் செய்து கொண்டுவந்த நாட்களில்; "சத்தமிட்டு; ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்" (யோவா.7:37,38). இந்த ஜீவத்தண்ணீரை ஆவிக்குரியவர்கள் அதாவது இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். கர்த்தர் நம்மை நிலையான காரியத்திற்கு நேரே வழிநடத்துகிறார். உலகத்தில் இருக்கிற மனிதன் கண்களினால் திருப்தியடைகிறதில்லை. ஆனால் ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். ஜீவத்தண்ணீரை ஒரு மனிதன் பெற்றுக் கொள்ளும்போது ஜீவ காலமெல்லாம் அவன் திருப்தியுள்ளவனாயிருக்கிறான். அவன் உள்ளத்திலே நதிகள் ஓடும். திருப்தியுள்ளவன் தேன்கூட்டையும் மிதிப்பான் என்ற வசனத்தின்படி அவன் ஆசீர்வதிக்கப்படுவான்.

மேலும் கர்த்தர் சொல்லும்போது; "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது, நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்" (யோவா.4:14). கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்துப் பற்றிக்கொண்டவர்கள் ஒருக்காலும் சோர்ந்துபோவதில்லை. கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்த ஜீவனுள்ள வசனம் அவர்களுடைய ஜீவியகாலமெல்லாம் நித்திய நித்தியமாய் ஊறுகிற நீரூற்றாக இருக்கிறது. ஆகையால் ஏசாயா தீர்க்கன் மூலம் கர்த்தர் சொல்லும்போது; "ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்" (ஏசா.55:1,2). இன்றைக்கு திருப்திசெய்யாத பொருளுக்காக செலவுசெய்து ஏமாற்றப்படுகிற அநேகரை நாம் காண்கிறோம். மனிதர்கள் அங்கும் இங்கும் அலைந்து ஓடி தங்களை அழிவுக்கு நேரே வழிநடத்தும் பொருட்களை வாங்கி அழிந்துபோகிறார்கள். கர்த்தர் பணமுமின்றி விலையுமின்றி திராட்சரசமும் பாலும்

கொள்ளுங்கள் என்று அழைக்கிறார். அவர் சகலத்தையும் நமக்கு இலவசமாகவே கொடுத்திருக்கிறார். சிலர் இலவசமாக கொடுத்தால் தவறாக புரிந்துகொள்கிறார்கள். நம்மை மதம் மாற்றுவதற்கு இலவசமாக கொடுக்கிறார்கள் என்று தப்பு கணக்குப்போடுகிறார்கள். அன்பானவர்களே, உங்களுடைய தகப்பன் உங்களுக்கு நலமான காரியங்களை செய்வதற்கு உங்களிடத்தில் பணம் பெற்றுக்கொள்வாரா? உங்களுடைய பரமபிதா உங்களுடைய நன்மையை விரும்புகிறார். ஆகையால் ஓ தாகமாயிருக்கிறவர்களே என்னிடத்தில் வந்து இவைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள் என்று அழைக்கிறார். அவர் கொடுக்கிறவைகளை நீங்கள் உலகத்தில் வேறு எங்கும் பெற்றுக்கொள்ள இயலாது.

"சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன். உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும், பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளையும் திறந்து வனாந்தரத்தைத் தண்ணீர்த் தடாகமும், வறண்ட பூமியை நீர்க்கேணி களுமாக்கி, வனாந்தரத்திலே கேதுருமரங்களையும், சீத்தீம்மரங்களையும், மிருதுச் செடிகளையும், ஒலிவமரங்களையும் நட்டு, அவாந்தரவெளியிலே தேவதாரு விருட்சங்களையும், பாய்மரவிருட்சங்களையும், புன்னை மரங்களையும் உண்டு பண்ணுவேன். கர்த்தருடைய கரம் அதைச் செய்தது என்றும், இஸ்ரவேலின் பரிசுத்தர் அதைப் படைத்தார் என்றும், யாவரும் கண்டு உணர்ந்து சிந்தித்து அறிவார்கள்" (ஏசா.41:17-20). யார் தாகத்திற்கு தண்ணீரைத் தேடிவருகிறார்கள் என்றால் சிறுமையும் எளிமையுமானவர்கள்தான் வருகிறார்கள். மற்றவர்கள் எங்களுக்கு என்ன குறையிருக்கிறது என்று மெத்தனமாக உலக ஆசாபாசங்களில் மயங்கி தங்களை மாய்த்துக்கொள்கிறார்கள். ஆகையால் சிறுமையானவர்களின் தேவன் அவர்களுக்கு இரங்கி அவர்கள் நடுவிலே பெரிய காரியங்களைச் செய்கிறார். வனாந்தரம் தண்ணீர் தடாகமாக மாறுகிறது. வறண்ட பூமி நீர்க்கேணியாக மாறுகிறது. இவைகளை கர்த்தர் தம்முடைய வல்லமையால் செய்கிறார். மோசே வனாந்தரத்தில் ஆறுலட்சம்பேரை வழிநடத்தும்போதும், அவர்கள் தண்ணீர் கேட்டு முறுமுறுக்கும்போதும் கன்மலை யிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணினார். ஆம், அவர் உங்களுடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட செழுமையை கட்டளையிட முடியும். அதை நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் என்றார்" (யோவா.6:35). தாகமுள்ளவர்களுக்குத்தான் கர்த்தர் ஜீவதண்ணீரைக் கொடுக்கிறார். நம்முடைய முற்பிதாக்களின் நாட்களில் தேவனை நோக்கி கதறியவர்களுக்கு அவர் இறங்கினார். தாவீது சொல்லும்போது; "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?" என்கிறார் (சங்.42:1,2). மான்கள் நன்கு மேய்ந்து விட்டு தாகத்திற்கு நீரோடைகளை நோக்கி கதறிக்கொண்டு ஓடும். அதைப்போல தாவீது கர்த்தரை நோக்கி கதறினார். உலகத்திலே எத்தனையோ இருந்தாலும் தாவீதுடைய தாகத்தை தீர்ப்பது தேவசமுகமாகத்தான் இருந்தது. ஆகையால் என் ஆத்துமா தேவன்மேல் ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது என்கிறார். உங்களுடைய ஆத்துமா இவ்விதமாக தேவனை நோக்கி கதறுகிறதா? மேலும், "ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்" என்கிறார் (சங்.36:9). கர்த்தரிடத்தில் ஜீவஊற்று இருக்கிறது அது நம்முடைய தாகத்தை தீர்க்கும் ஜீவஊற்று.





## கர்த்தருக்குகடன்கொடுத்த ஒரே பெண் அன்னாள்

-John S. Nathan, 94444 43378

**ந**ற்குணவாதியும், நற்கிரியைகளின் தாயும், கர்த்தருக்கே கடன் கொடுத்த ஒரே பெண்மணியும் தான் நினைத்ததை செய்து முடித்தவருமான "அன்னாள் என்பவர் Gracious கிருபை பெற்றவர். "எல்கானா" God has created தேவனால் உண்டாக்கப்பட்டவர் Possessed உடமைக்குரியவரின் அன்பு மனைவியானவர். இவர் நெடுங்காலமாக பிள்ளை பாக்கியமில்லா மலடியாயிருந்தவர். அனைவரின் பரிகாசத்திற்கு காரணமானவர், சிறந்த ஜெபவீராங்கனை. தம்முடைய திட்டத்தினால் தன் அழகிய ஆண் மகன் சாமுயேலை ஆண்டவருக்கு கடனாக கொடுத்த ஒரே மகளியரின் மணிமகுடத்தை மிகவும் விலையேற பெற்றவர் ஆவார். யாராலும் மறக்க முடியாதவர்.

ஆந்திர மாநிலம் ஹைதராபாத்திலிருந்து லாகூரில் ஆட்சிபுரிந்த (மகா இராஜாசிங், ஆங்கிலேயர்கள், தங்களை எதிர்த்த எதிரிகைளை அழித்து ஒழித்ததற்கு அடையாளமாக நன்றியுடன் 1850-ல் தன்னிடத்திலிருந்த கோஹிநூர் 106 கெரட் வைரத்தை ஆயிரத்துமுன்னூற்று இருபதாயிரம் கோடி 132,00000000 ரூபாய்) மதிப்புள்ளதை அன்று உலகத்தை ஆண்டுவந்த மகாராணி விக்டோரியாவுக்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்டதை இன்று அதனை இந்தியா, மற்றும் பாக்கிஸ்தான் தமக்கு வேண்டுமென 166 ஆண்டுக்கு பிறகு உரிமை கோருகிறார்கள். ஒருவேளை இந்தியாவுக்கு அவர்கள் அதனை கொடுத்தால் எங்கு அதனை பாதுகாப்பாக வைக்க முடியும்? சிந்தனை செய்தால் சிரிப்புதான் வருகிறது. ஏனெனில் நம்மில் சிலர் கல்லையும் கடத்தி காசாக்குபவர்களாயிற்றே! (மத்தேயு 7:7 மாற்கு 11:24 என வாக்குத்தத்தம் 1150 ஆண்டுகளுக்கு பிறகு கூறப்பட்டதால் (அவருக்கு தெரிய வாய்பில்லை) என்றாலும் மிகுந்த விசுவாச உறுதியுடன், பயமில்லாமல் (விசுவாசிப்பவர்கள் எதற்கும் பயப்படவேண்டியதில்லை, பயப்படுகிறவர்கள் விசுவாசிக்க முடியாது) 1சாமுயேல் 1:11,20,27,28 வசனத்தில் கூறியுள்ளபடி கர்த்தர் தனக்கு ஓர் ஆண்பிள்ளையை கொடுப்பீரானால் நான் அவனை கர்த்தருக்கு வாழ்நாள் முழுவதும் தேவ ஊழியம் செய்யும்படி கொடுப்பேன் என பொருத்தனை செய்தார். வசனம் 28 Therefore also I have lent him to the Lord; as long as he liveth he shall be lent to the Lord.அவ்வாரே அவர் சாமுயேலை பெற்று தனது மகனை, தனக்காக வளர்க்காமல் தேவனுக்கென்று வளர்த்து பால் மறந்த பிறகு சீலோவிலே ஊழியக்காரராகிய ஏலி என்பவரிடம் கொண்டுபோய் விட்டார்.

நமது அன்னை அன்னாளின் இவ்வரிய செயலை சிறிதும் சிந்தியாமல், உயிரோட்டமுள்ள இச்செயலை அற்பமாக எண்ணி தமிழில் வேதாகமத்தை தவறாக மொழிபெயர்த்தவர்கள், இன்றும் அதனை வாசித்து பிரசங்கம் செய்துகொண்டிருப்பவர்கள் இன்றளவும் தவறாக மொழிபெயர்த்ததை திருத்திக்கொள்ளாமல் இருந்து வருகிறபடியால் வேதாகமமொழியிலிருந்து (எபிரெயம்) மொழி பெயர்த்த இன்றளவும் தவறாகவே பிரசங்கித்து வருவது எவ்வளவு வேதனைக்குரியது என்பதை புரிந்து நாமும் சும்மா இருந்துவிடலாமா? இதனை தமிழில் மொழி பெயர்க்கும்போது கூர்ந்து கவனித்திருந்தால் இருமுறை கடனாக (Lent) கொடுக்கிறேன் என்றுமொழி பெயர்த்திருக்கவேண்டுமே மாறாக ஒப்புக்கொடுக்கிறேன் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமே! **கடனாக கொடுக்கிறேன்** என்ற கரு பொருள் எங்கே போனது?

**– தொடர்ச்சி அடுத்த இதழில்**

நினைவுகூருங்கள் அவர்கள் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருந்தபடியால் கர்த்தர் ஆபிராமையும் சாராயையும் தெரிந்தெடுத்தார்.

சாராய் மீதமுள்ள தன் வாழ்நாட்களை கூடாரத்தில் ஒரு நாடோடியாகவே கழித்தாள் ஒருபோதும் உண்மையாகவே ஒரு நிலையான வீட்டினை பெற்றிருக்கவில்லை.

சாராயும் ஆபிராமும் தாங்கள் பெறப்போகும் சுதந்தரமாகிய இந்த பெரிய ஜாதியை ஒருபோதும் காண ஏதுவில்லாதவர்களாகவே இருந்தார்கள்.

இருந்தபோதிலும் அவள் தன் புருஷன் மேலும் விசேஷமாக கர்த்தரிடத்திலும் பெரிய விசுவாசத்தைக் கொண்டவளாகத் தரித்திருந்தாள்.

1பேதுரு 3:4-6 நம்முடைய புருஷர்களுக்கு எவ்விதமாகக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்பதற்கு சாராய் ஒரு எடுத்துக்காட்டாக கொடுக்கப்பட்டுள்ளாள்.

❒ இருதயத்தில் மறைந்திருக்கிற அழகு சாந்தம் அமைதலுள்ள ஆவியுடனிருக்கிற அந்த ஸ்திரீயை தேவன் கனபண்ணுகிறார்.

❒ சாராளின் நாட்களில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகள் இவ்விதமாக தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்.

❒ தங்களுடைய சொந்த புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள் - ஏனென்றால் சாராள் தன் புருஷனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள் - பயபக்தியோடிருந்தாள்

❒ அவள் ஆபிரகாமை வீட்டின் தலைவராகயிருக்க அனுமதித்தாள் - அவள் ஆலோசனைக் கொண்டிருந்தபோதும் ஆபிரகாம் என்ன செய்யும்படி சொன்னானோ அதைக் கேட்டு அதற்கு கீழ்ப்படிந்திருந்தாள்.

❒ அவன் மீது அவள் அதிகமான அன்பைக் காண்பித்தாள். வேறு எந்த மனிதன் பக்கம் ஒருபோதும் செல்லவில்லை.

❒ அவள் அவனை ஆண்டவனே என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள் - 1பேது.3:6

கீழ்ப்படிந்திருப்பதின் மூலம் நமது திருமண பந்தத்தை ஒரு இனிமையான இடமாக மாற்ற முடியும் காரியங்களைப் பற்றிய வாக்கு வாதங்கள் மற்றும் எப்போதும் நியாயப்படுத்த முயற்சித்தல் நாட்களை மிக நீளமாக்கிவிடுகிறது. பேச்சு வார்த்தை மற்றும் ஒப்புரவாகுதல் கூட ஒரு நல்ல திருமணத்திற்கு திறவுகோல்களாயிருக்கிறது. சாராள் நான் கண்டிப்பாக போவேன் ஆனால் நமது வேலைக்காரர்களை நம்முடன் அழைத்துச் செல்வது அவசியம் மேலும் லோத்தும் அவனுடைய வேலைக்காரர்களோடே சென்று விட்டான் என்று சொல்லியிருக்கலாம்

ஆதியாகமம் 16 - சாராள் பொறுமை இழந்தவளாக மாறுகிறாள். 10 ஆண்டுகளுக்கு மேலான போதிலும் சாராள் பிள்ளையில்லாதவளாகவே இருந்தாள்.

அவள் பொறுமையை இழந்த பொழுது ஒரு மாபெரும் தவறு செய்துவிட்டாள்.

**நடப்புச் செய்திகள்**

❒ கொடைக்கானல் வனப்பகுதியிலுள்ள கி.மு.2000 ஆண்டிற்கு முந்தைய ஆதிவாசிகளின் ஈமச்சின்னங்களை அழியாமல் பாதுகாக்கவேண்டும்.

❒ மது விலக்கை நாடு முழுவதும் அமல்படுத்தவேண்டும் என்று பிரதமர் மோடிக்கு பீகார் முதல்வர் நிதிஷ்குமார் வேண்டுகோள்.

❒ மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இந்திய விடுதலை போராட்ட வீரர் நேதாஜிசுபாஷ் சந்திரபோஸின் வெண்கல சிலை திறக்கப்பட்டுள்ளது. -நன்றி தினகரன் நாளிதழ்



ஆகையால் ஜீவதண்ணீரண்டைக்கு வாருங்கள் என்று அழைக்கிறார். ஒரு முறை இயேசுவோடு சீஷர்கள் படவில் சென்று கொண்டிருந்தபோது படவு மோசமடையத்தக்கதாக ஜலத்தினால் நிறைந்தது. அப்பொழுது சீஷர்கள், "ஐயரே, ஐயரே, மடிந்துபோகிறோம் என்று அவரை எழுப்பினார்கள்; அவர் எழுந்து காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார்; உடனே அவைகள் நின்றுபோய், அமைதலுண்டாயிற்று" (லூக்.8:24). இங்கே சீஷர்களால் கடலின் கொந்தளிப்பை நிறுத்த முடியவில்லை. ஆகையால் இயேசுவை நோக்கி: ஐயரே, ஐயரே, என்று கதற ஆரம்பித்தனர். அவர்களுடைய கூக்குரலை கேட்டு கர்த்தர் காற்றையும் கடலையும் அமைதல்படுத்தினார். நாம் பலவேளைகளில் இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொள்கிறோம். அப்பொழுது சிலநேரங்களில் மனிதர்களை நாடுகிறோம். அவர்களால் அப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து நம்மை காப்பாற்ற முடியாமற்போய்விடுகிறது. நாம் கர்த்தரை நோக்கி கதறுவோமானால் கட்டாயம் கர்த்தர் நம்மை எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் காப்பார். எஸ்றா என்ற தேவ மனிதனை அறிவீர்கள். அவன் தன் ஜனங்களுக்காக கர்த்தரை நோக்கி மன்றாடினான். "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் நீதியுள்ளவர்; ஆகையால் இந்நாளில் இருக்கிறதுபோல, நாங்கள் தப்பி மீந் திருக்கிறோம்; இதோ, நாங்கள் உமக்கு முன்பாகக் குற்றத்திற்குள்ளானவர்கள்; இதினிமித்தம் நாங்கள் உமக்கு முன்பாக நிற்கத்தக்கவர்கள் அல்ல என்று பிரார்த்தித்தேன். எஸ்றா இப்படி விண்ணப்பம்பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்துகிடக்கையில், இஸ்ரவேலில் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவனிடத்தில்வந்து கூடிற்று, ஜனங்கள் மிகவும் அழுதார்கள்" (எஸ்.9:15 மற்றும் 10:1). எஸ்றா தங்களுடைய குற்றத்தை தேவசமுகத்தில் அறிக்கையிட்டு அழுதான். அவனுடைய கண்ணீரை கர்த்தர் கண்ணோக்கினார்.மேலும் அவனோடு சேர்ந்து அழுத இஸ்ரவேலின் கண்ணீரைக் கண்டார். அவர்களுக்கு இரக்கம் செய்தார்.

இப்படிப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் சிலகாலம் கர்த்தரை விட்டுவிட்டார்கள். ஆகையால் எரேமியா தீர்க்கன் மூலம் உணர்த்தும்போது; "என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவதண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்" (எரே.2:13). இத்தனை ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்ட இந்த இஸ்ரவேலர் ஜீவதண்ணீர் ஊற்றாகிய கர்த்தரை விட்டு பாகால்களை சேவிக்கவும் தேவனுக்கு விரோதமாக காரியங்களில் ஈடுபடவும் ஆரம்பித்தனர். இன்றைக்கும் அநேகர் தங்களுடைய கையின் பிரயாசத்தை நம்பி கர்த்தரை மறுதலித்துப்போய்விடுகிறார்கள். அவர்கள் அதிகமாக சம்பாதிக்கிறார்கள். ஆனால் அவர்கள் கடனாளிகளாக இருக்கிறார்கள். காரணம் என்ன? அவர்களுடைய சம்பாத்தியம் அவர்களில் நிற்பதில்லை. கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அவர்களோ, தண்ணீர் நிற்காத தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக்கொள்கிறார்கள். ஒரு முறை சீஷர்கள் மீன்பிடிக்கும்படி சென்றார்கள். அன்று இரவிலே ஒன்றும் பிடிக்கவில்லை. விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள். அப்பொழுது அவர்களை நோக்கி: பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்று கேட்டார். அதற்கு அவர்கள் ஒன்றுமில்லை என்றார்கள். இவர்கள் ஒன்றும் பிடிக்காததற்கு காரணம் என்ன? ஜீவனுள்ள கர்த்தரை விட்டுவிட்டார்கள். அவர் அழைத்த ஊழியத்தை விட்டுவிட்டார்கள். பேதுருவோடு சேர்ந்து கொண்டு மீண்டும் மீன்பிடிக்கும்படி கடலுக்குச் சென்றார்கள். இந்த விதமாக தம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும்

அசட்டை செய்துவிட்டு செல்லுகிறவர்கள் ஒன்றும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் தாங்கள் அறிந்த கர்த்தரை விட்டுவிட்டார்களே! அன்பு சகோதரனே, சகோதரியே உங்களுடைய சூழ்நிலை எப்படியிருக்கிறது? நீங்கள் ஜீவனுள்ள கர்த்தரை இஸ்ரவேல் மக்களைப்போல விட்டுவிட்டு தண்ணீர் நிற்காத தொட்டிகளை கட்டிக்கொண்டீர்களா? அல்லது சீஷர்களைப்போல மீண்டும் உங்களுடைய வேலைக்கு திரும்பிவிட்டீர்களா? கர்த்தரை விட்டுவிடாது பற்றிக்கொள்ளுங்கள் அப்பொழுது கணக்கில்லா ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள். இயேசுவை விட்டு விட்ட யூதாஸின் நிலைமையை நீங்கள் அறிவீர்களா! பணத்தை இச்சித்து பின்வாங்கிப்போன அவன் நான்றுகொண்டு செத்தான் (மத்.27:5). அவனுடைய முடிவை அவனே தெரிந்து கொண்டான். கர்த்தர் அவனை ஒரு அப்போஸ்தலனாக தெரிந்துகொண்டார். அவனோ பாவத்தை சம்பாதித்து, மரணத்தை தெரிந்துகொண்டான். இவனைப் போல நம்முடைய முற்பிதாக்களில் சவுல் என்ற ராஜாவும் அவன் மூன்று பிள்ளைகளும் அவன் ஆயுததாரியும் ஒருமிக்க செத்துப்போனார்கள் என்று 1சாமு.31:6-ம் வசனத்தில் படிக்கிறோம். இவர்களுடைய மரணத்திற்கு காரணம் என்ன? கர்த்தருடைய வார்த்தையை புறம்பாக்கிப்போட்டார்கள். ஆகையால் பாவத்தின் சம்பளம் மரணம் என்ற வசனத்தின்படி மரணத்தை தழுவிக் கொண்டார்கள். அன்பு தேவ ஜனமே நாம் கர்த்தரை விட்டு விடும்போது மரணம் நம்மை பற்றிக்கொள்ளும். நீங்கள் ஒருக்காலும் ஜீவனுள்ள தேவனை விட்டுவிடாது பற்றிக்கொள்ளுங்கள். தாவீதைப்போல, எஸ்றாவைப்போல, ஆண்டவருடைய பதினொரு சீஷர்களைப்போல இயேசுவை பற்றிக்கொள்ளுங்கள். அவர் உங்களோடு இருக்கும்போது உங்களுக்கு பாதுகாப்பு உண்டு எல்லா இக்கட்டுகளுக்கும் உங்களை விடுவித்து காப்பார்.

**கர்த்தரை பற்றிக்கொண்டவர்களுக்கு கர்த்தருடைய வசனம் கொடுக்கும் வாக்குத்தத்தம் என்ன?**

"இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை, சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார்" என வாசிக்கிறோம் (வெளி.7:16,17). இந்த வாக்குத்தத்த ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்ள, இன்றே கர்த்தருடைய சித்தத்திற்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். அவருடைய வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள். உங்களை நீங்களே ஆண்டுகொள்ள இடம்கொடாதிருங்கள். மனித பாரம்பரிய கட்டுகளை விட்டுவிட்டு, ஆண்டவரின் சத்தம் கேட்கும் ஆடுகளாக மாறுங்கள். அவர் தம்மிடம் வருவோரை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றண்டைக்கு நடத்துகிறார். அப்படிப்பட்டவர்கள் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவார்கள். ஆகையால் அவர்கள் ஒருக்காலும் தாகமடையார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இவ்வுலகத்தில் மாயையைப் பற்றிக்கொள்ளாமல், ஜீவனுள்ள மார்க்கத்திற்கு நேரே வழிநடக்க பிரயாசப்படுங்கள். அப்பொழுது கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**ஜெபியுங்கள்**

- கடந்த மாதம் கூடங்குளம் மற்றும் தூத்துக்குடி கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்ததற்காக...
- இம்மாதம் தேனி, திருவள்ளூர், சென்னை மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் நடைபெறவுள்ள கூட்டங்களுக்காக...
- வேதாகம பள்ளிக்காக...
- அரியலூர் மாவட்டத்தில் நமது பத்திரிகை வாசகர்கள் குறைவாக உள்ளனர். புதிய வாசகர் கிடைக்க...
- நம்தேசம் சமாதான கர்த்தரை அறிந்துகொள்ள...



## உடன்படிக்கைகள் - Covenants

-Paula Bates

பெண்கள் பகுதி

**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**புதிய உடன்படிக்கையை விசுவாசிப்பதற்குரிய காரியங்கள்.**



- மாமிச பலிகள் இல்லை - எபி.9:12, ரோம.12:1
- விருத்தசேதனம் இல்லை - ரோம.2:29, கலா.5:1-6
- நாம் அனைவரும் ஆசாரியர்களாயிருக்கிறபடியால் தேவனிடத்தில் ஜெபிக்க முடியும் - எபி.9:24
- புதிய உடன்படிக்கையின் கீழ் வாத்தியகருவிகள் காணப்படவில்லை - எபே.5:19
- மோசேயினால் பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்ட பிரமாணத்தை கைக்கொள்ள வேண்டாம் - அப்.15
- கர்த்தருடைய பந்தி - மத்.26:17-30, லூக்.22:7-30, 1கொரி.11:24-26.
- ஞாயிற்று கிழமையில் ஆராதிக்கவேண்டும். ஓய்வுநாளில் (சனிக்கிழமை) அல்ல - வெளி.1:10, அப்.20:7
- பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் - கொலோ.2:12, அப்.2:38-47
- தசம பாகம் இல்லை - 2கொரி.9:7.

## சாராள், ஜாதிகளின் தாய்
## Sarah, Mother of Nations

**ஆபிராமும் சாராளும் தங்களது பயணத்தை துவக்கினர்.**

☐ ஆதி.11:30-ல் நாம் முதன்முதலாக சாரய்க்குப் பிள்ளையில்லை, மலடியாயிருந்தாள் என வாசிக்கிறோம்.

☐ 4000 ஆண்டுகளுக்கு முன் மிகவும் நவீன நகரமாகக் கருதப்பட்ட புகழ்வாய்ந்த நகரமான ஊர் என்கிற கல்தேயர் தேசத்தில் அவர்கள் வசித்தார்கள். அங்கே சுற்றிலும் ஓடும் நீர்நிலைகளையும் பல அறைகளும் பள்ளிக்கூடங்களும் மற்றும் புத்தகங்களும் கணித கணக்கீட்டு முறைகளும், வாய்க்கால்களும் கொண்ட வீடுகள் இருந்தன.

☐ சாராய் ஆபிராமோடு அந்த இடத்தை விட்டு புறப்பட்டு ஆபிராமுக்கு 75 வயது ஆகும் வரை தன் மாமனார் ஆரான் இருந்த இடத்தில் இருந்துவிட்டாள்.

☐ ஆபிராம் ஒரு பெரிய ஜாதியாவான் என கர்த்தர் அவனுக்கு வாக்குப்பண்ணியிருந்தார் எனவே அவன் அவனுடைய தேசத்தையும் அவன் வீட்டையும் விட்டு புறப்பட்டு தேவன் காண்பிக்கும் தேசத்துக்குப்போக வேண்டியவனாயிருந்தான்.

இந்த பெரிய செய்தியை ஆபிராம் சாராயிக்குத் தெரிவித்தபோது அவளது முகம் எப்படியிருந்திருக்கும் என்று கற்பனை செய்யமுடிகிறதா?

ஒருவேளை நாம் எங்கே போகிறோம் என்று அவள் கேட்டிருக்கலாம்.

அங்கே எப்போது போய்ச் சேருவோம்?

எப்படி என்னுடைய தோழிகளையும் குடும்பத்தாரையும் விட்டுப்பிரிய முடியும்?

சாராய் கீழ்ப்படிதலுள்ள மனைவியாக தன் புருஷனுடன் சென்றாள். நிச்சயமாக அந்நேரத்தில் சந்தேகங்கள் கொண்டு துயரமடைந்திருக்கலாம்.

செயலும்) இயேசுவின் கையிலிருந்து நம்மைப் பறித்துக்கொள்ள முடியாது. நித்திய ஜீவனை நிச்சயமாகவே பெற்றுக்கொள்ளுவோம். ஒருவேளை நீங்கள் இயேசுவை விசுவாசியாமல் பாவத்தின் அடிமைத்தனத்திலேயே நிலைத்திருப்பீர்களென்றால் “பாவத்தின் சம்பளம் மரணம்” (ரோம.6:23) என்பதை மறக்க வேண்டாம். ஆனால் தேவனுக்கு அடிமைகளானால் “...பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன் ரோமர் 6:22. அன்பான சகோதரியே, தேவன் உங்களிடத்தில் அன்பாயிருக்கிறார் என்பதை அசட்டை செய்து நித்திய ஜீவனை இழந்துவிடாதே.

இன்று அநேகர் தேவன் என்னோடு பேசினார், எனக்கு இன்னின்ன வாக்குத்தத்தங்களைக் கொடுத்துள்ளார் என அநேக வசனங்களைக் கூறி திருப்தியடைகின்றனர், ஆறுதலைடைகின்றனர். கர்த்தருடைய வசனம் ஜீவனாயும் ஆவியாயுமிருக்கிறபடியால் நிச்சயமாக நமக்கு ஆறுதலையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் சந்தேகமேயில்லை. வேதாகமத்தை வாசிக்கும்போது யார், யாருக்கு, எப்போது என்ற கேள்வியோடு வேதத்தை வாசியுங்கள். இப்போதிருக்கிற நமக்கு “நித்தியஜீவனை அளிப்பேன்” என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் என்று 1யோவா.2:25-ல் வாசிக்கிறோம். ஆம், சகோதரிகளே, “விசுவாசத்தின் நல்லபோராட்டத்தைப்போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள், அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்” (1தீமோ.6:12). நாம் அழைக்கப்பட்ட அழைப்பைப் பற்றிக்கொள்வோம், ஆவிக்குரிய ஓட்டத்தை ஓடி முடிப்போம், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம். கர்த்தர் தாமே நமக்கு உதவிசெய்வாராக! ஆமென்.

*இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் – 2தீமோ.4:8*


தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். 9443558041




**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

‘ஒரே வழி’ வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ
அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று
**Certificate** பெற்றுக்கொள்ளுங்கள்
வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College,**
**P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




## வேத அறிவுப்போட்டி எண் 188–ல் வெற்றிபெற்றவர்கள்

1.B.ஸ்டெல்லாம்மா - கூத்தூர்
2.K.ஜீவாமிர்தம் - பாண்டமங்கலம்
3.Mrs.சைலா அலெக்ஸ் - கன்னியாகுமரி
4.Sis.இராஜம்மாள் - திருப்பூர்
5.Mrs.ஃபுளோரா எழில் - தேவாலபுரம்
6.S.தங்கம் - கன்னியாகுமரி
7.E.ஜாய்ஸ் கெலன் புனிதா - சென்னை
8.S.R.பெரியசாமி - நாமக்கல்
9.J.விக்டர் சுவிசேஷமுத்து- ஆனந்தபுரம்
10.Mrs.சாந்தா பழனி - தருமபுரி
11.Mrs.ஜெபாமோசஸ் - தூத்துக்குடி
12.Mrs.ராஜ் ராமச்சந்திரன்- வாலாஜாபேட்
13.T.ஏஞ்சலின் நேசமலர் - சாந்தாபுரம்
14.Sis.அல்லிராணி காட்வின் - சென்னை
15.Mrs.லங்காஜீவரத்னம் - சிவகாசி
16.Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
17.Sis.ஜோதிமணி - ஸ்ரீவில்லிப்புத்தூர்
18.M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
19.R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
20.R.அந்தோனியம்மாள் - தூத்துக்குடி
21.Sis.தேவிராஜசிங் - திருப்பூர்
22.T.ராஜாத்தி - கோம்பை
23.A.ஜோதிகாந்தம் - வேலூர்
24.Sis.கமலாதேவபிச்சை - சாத்தான்குளம்
25.S.பிரின்ஸ் ராஜதுரை - கோத்தகிரி
26.A.ஜெயந்தி - குமாரபாளையம்
27.Mrs.ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
28.R.அனிதா நெகேமியா - ரெட்டியார்பட்டி
29.Mrs.ரூத்ஜெயராணி அன்புராஜ்- பெருமாள்புரம்
30.G.நிர்மலா வின்சென்ட் - புன்கமுத்தூர்
31.ஜாய்மேத்தியு - வி.கே.புரம்
32.Mrs.ரெபேக்கா ஐசெக் - கரைக்குடி
33.A.ரெபேக்காள் - மதுரை
34.ஃபிராங்கிலினா ஜான் - ஊட்டி
35.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
36.J.ரேச்சல் தமிழரசி - பசுமலை
37.K.எஸ்தர் உமா - மதுரை
38.Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
39.R.ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
40.A.டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
41.Mrs.பவுலின்மார்ட்டின் - காரைக்குடி
42.T.தீபா - நாமக்கல்
43.Mrs.பிரேமா - தூத்துக்குடி
44.Mrs.ருக்மணிஜெயசீலன் - தேனி
45.Mrs.ஆலிவ் ஜெயபாலன்-கோவை
46.Sis.ஸ்டெல்லா பக்தர் - சென்னை
47.T.ஜெசி - நாமக்கல்
48.Mrs.ஜெம்புளிங்கம்மாள் - தூத்துக்குடி
49.Mrs.கெப்சிபா மங்கல்ராஜ் - பெருமாள்புரம்
50.T.தீபா - நாமக்கல்
51.B.பிரிஸ்கில்லா பாபுராஜ் - மதுரை
52.K.ராணி - தூத்துக்குடி
53.K.சாந்தி - வாடிப்பட்டி

## வேத அறிவுப்போட்டி எண் 189–ல் வெற்றிபெற்றவர்கள்

1.A.கிரேஸ்ஜெயந்தி - குமாரபாளையம்
2.Mrs.சைலாஅலெக்ஸ் - கன்னியாகுமரி
3.T.ஏஞ்சலின் - கன்னியாகுமரி
4.Sis.இராஜம்மாள் - திருப்பூர்
5.Mrs.ஆலிவ்ஜெயபாலன்- கோவை
6.Mrs.ரெபேக்காள் ஐசக் - காரைக்குடி
7.Mrs.ரூத் ஜெயராணி அன்புராஜ் - பெருமாள்புரம்
8.S.தங்கம் - கன்னியாகுமரி
9.Mrs.லங்காஜீவரத்னம் - சிவகாசி
10.A.டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
11.Mrs.நவரத்னம் மெர்சி - நாசரேத்
12.Mrs.கிரேஸ் ஸ்டெல்லா பக்தர் - சென்னை
13.A.ரெபேக்காள் - மதுரை
14.Sis.சாந்தா பழநி - தருமபுரி
15.Mrs.பிரேமா தினகரன் - தூத்துக்குடி
16.அல்லிராணி காட்வின் - சென்னை
17.ஜம்புலிங்கம்மாள் - தூத்துக்குடி
18.K.சாந்தி - வாடிப்பட்டி
19.Tmt.மரகதம்திரவியம் - கோம்பை
20.Miss.ராஜம்மாள் மனோன்மணி - சிவகாசி
22.T.ராஜாத்தி - கோம்பை
22.K.S.மாணிக்கவாசகம்- திருச்சி
23.Mrs.ஃபிரங்கிலின் ஜான் - ஊட்டி
24.Mrs.ஜாய் மேத்யு - விக்கிரமசிங்கபுரம்
25.Mrs.பிரமிளா ரேவதி - கோவை
26.K.ராணி - தூத்துக்குடி
27.Sis.தேவி ராஜசிங் - திருப்பூர்
28.Mrs.தேவபுஸ்பம் - தூத்துக்குடி
29.Mrs.ஜெபமோசஸ் - தூத்துக்குடி
30.Mrs.ஜெயமணிராஜம்மாள் - கடலூர்
31.Mrs.கமலா தேவபிச்சை - கலுங்குவிளை
32.E.ஜாய்ஸ்கெலன் புனிதா - சென்னை
33.Mrs.பொன்னிவிக்டர் - திருப்பூர்
34.Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
35.Mrs.எப்சி செல்வின் - சென்னை
36.K.மோகன் - குமாரபாளையம்
37.Mrs.ருக்மணிஜெயசீலன் - தேனி
38.Mrs.ருபவால்யா - சென்னை
39.Mrs.பவுலின் மார்டின் - சிவகங்கை
40.Mrs.அன்புகமலம் - காரைக்குடி

### வாழ்த்துக்கள்

வேதாகமம் முழுவதிலிருந்தும் கேள்விகள் கேட்கப்படுகிறது. எங்களால் முடியாது என்று ஒருசிலர் போன் மூலமாக சொல்லியிருந்தபோதும் வேதத்தில் உள்ள 66 புத்தகங்களையும் ஆராய்ந்து இரவு பகல் பாராது தேடி கண்டுபிடித்து எழுதும் வேத அறிவுப்போட்டியாளர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

சங்கீதக்காரனைப்போல “வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்” என்ற சங்கீதம் 119:113–ன்படி நீங்கள் வேதாகமத்தில் கவனதை செலுத்துவதைக்குறித்து நாங்கள் சந்தோஷமடைகிறோம்.

இவ்வருடத்தில் 50–ம்பதிற்கும் மேற்பட்ட வேத மாணவர்களை ‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ மாத இதழ் உருவாக்கியுள்ளது. கர்த்தருக்கு சித்தமானால் சீக்கிரத்தில் அவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கப்படும்.

–ஆசிரியர்

# கிறிஸ்துவுக்குள்
## In Christ

*J.C.Choate*



வேதாகமம் நாம் பாவமற்றவர்களாக சரீரப்பிரகாரமாகப் பிறந்திருக்கிறோம் என்று போதிக்கிறது. நாம் பரிசுத்தமுள்ளவர்களும், கபடற்றவர்களும், காக்கப்பட்டவர்களுமாக இருக்கிறோம். ஆனால் நாம் வயது வந்தவர்களாக, பொறுப்புடைய வயதை அடைந்திருக்கையில், நல்லது கெட்டதை அறிந்து, இவ்வாறாக பாவிகளாக மாறி (ரோம.3:23), நாம் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கும்படிக்கு இப்போது கட்டாயமாக மனந்திரும்பி சிறு குழந்தைகளைப் போல மாறவேண்டியவர்களாக இருக்கிறோம் (மத்.18:3).

பாவிகளாகிய நாம் இரட்சிக்கப்படவேண்டியது அவசியம் ஏனென்றால் நாம் தேவனுடைய கட்டளையை மீறினவர்களாயிருக்கிறோம் (1யோவா.3:4). பவுல் நமக்கு "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ ...... நித்தியஜீவன்" (ரோம.6:30) என்று நினைப்பூட்டுகின்றான்.

ஆனால் நாம் எப்படி பாவத்திற்கும் மரணத்திற்கும் தப்பித்துக் கொள்ளமுடியும்? நாம் எவ்வாறு மன்னிக்கப்பட்டு, மீட்கப்பட்டு, இரட்சிப்பின் நிலைமைக்குக் மாற்றப்பட முடியும்? நாம் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவோமானால் கிறிஸ்துதாமே நம்மை இரட்சிப்பார் என சொல்கிறார் (மாற்.16:16). பேதுரு திரளான ஜனக்கூட்டத்திற்குப் பிரசங்கித்தபோது, அவர்கள் விசுவாசிகளாகி, தாங்கள் செய்யவேண்டியது என்னவென்று அறிய விரும்பினார்கள். அவன் அவர்களிடத்தில் அவர்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றான் (அப்.2:38). இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டார் (அப்.2:47) என அறிவுறுத்தப்படுகிறோம்.

நம்மை இவ்வுலகத்திலிருந்து விடுவித்து கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் கொண்டு செல்லுகிறது ஞானஸ்நானம். இதுவே நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் கடைசி படியாகும் தேவனிலும், கிறிஸ்துவிலும் விசுவாசத்தின் மூலமும் நமது பாவங்களிலிருந்து மனந்திரும்புவதின் மூலமும், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று நமது விசுவாசத்தினால் அறிக்கையிடுவதின் மூலம் இது நடைபெறவில்லையென்றால் ஞானஸ்நானத்தினால் மட்டும் ஒன்றும் பிரயோஜனமில்லை, நிச்சயமாக, இது நமக்கு ஒன்றும் செய்யாது. அப்புறம் ஞானஸ்நானப்படுத்தப்படுகையில் நம்முடைய பாவங்கள் கழுவப்படும் பொருட்டு தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்பட்டு, கர்த்தருடைய கற்பனைகளை நிறைவேற்றுவதுடன் ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது என அறிவுறுத்தப்படுகிறோம் (பேது.3:21). தண்ணீர் தானே நம்மை இரட்சிக்கிறதில்லை ஆனால் நாம் கிறிஸ்துவின் சித்தப்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கிறபடியால் கிறிஸ்து நம்மை இரட்சிக்கிறார். 1பேதுரு3:21-ல் பேதுரு கூறுகிறபடி ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், அல்லது ஸ்நானம்பண்ணுவதற்காக இல்லாமல்



ஜீவனை கொடுக்கிறதாக இருக்கிறது. வேதம் கூறுகிறது; "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" (யோவா.17:3). தேவன் அன்பாகவே இருக்கிறார். எனவே தம்மால் உண்டாக்கப்பட்ட ஒருவனும் கெட்டுப்போகக்கூடாதென்று விரும்புகிறார். எனவே தான் தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசுகிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல், நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவா.3:16,17).

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அப்பொழுது மாத்திரமே ஒருவன் கெட்டுப்போகாமல் அழியாத ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியும். அநேகர் சம்பூர்ணமாக அனைத்து உலக ஆசீர்வாதங்களையும் பெற்றிருக்கும்போது மிகவும் களிகூர்ந்து சந்தோஷமாக வாழ்க்கின்றனர். இவையனைத்தும் அநித்தியமானவை, நிரந்தமற்றவை என நினைப்பதில்லை. எனவே தான் சகல சம்பத்துக்களையும் பெற்றிருந்த போதிலும் ஏதோ ஒரு சிறிய காரியத்தில் மனநிம்மதியை இழந்து தங்களை மாய்த்துக்கொள்கின்றனர். இவ்வுலகமோ, உலகின் செல்வ செழிப்போ, பட்டமோ, பதவியோ குழந்தைச் செல்வங்களோ ஒருவருக்கு நிச்சயமாகவே சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தராது. ஒருவேளை இவைகளெல்லாம் சிறிது காலத்திற்கு மனமகிழ்ச்சியைக் கொடுப்பதுபோல் தோற்றமளிக்கலாம். ஆனால் இவைகள் நித்திய மகிழ்ச்சியை ஒருபோதும் கொடுக்காது உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தை இயேசு மாத்திரமே கொடுக்க முடியும் (யோவா.14:27).

தேவன் முதல் மனிதன் ஆதாமையும் அவன் மனைவி ஏவாளையும் ஏதேன் என்ற ஒரு தோட்டத்தை உண்டாக்கி அதிலே அவர்களை வைத்தார். ஏதேன் என்பதற்கு 'சந்தோஷமான இடம்' என்று பொருள். தேவன் பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிறவராக இருந்தார். அப்படியென்றால் அவர்கள் இருவரும் அநுதினமும் கர்த்தருடைய சந்நிதியில் இருந்தார்கள் என்று பொருள். எப்பேர்பட்ட அற்புதமான மகிழ்ச்சியான சூழல் இது! இதனை அவர்கள் இழந்து தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். தேவசமூகத்தை இழந்தார்கள். அவர்களது கீழ்ப்படியாமையினால் பாவம் உலகத்திறகுள் பிரவேசித்து அனைவரும் பாவத்திற்கு அடிமையானோம். ஆனால் தேவ அன்பு நம்மை பாவத்தின் கோரப்பிடியிலிருந்து விடுவித்து தம்மிடமாய் இழுத்துக்கொள்ளும்படி தமது ஒரே பேறான இயேசுவை உலகிற்கு அனுப்பி அவர் சிந்திய இரத்தத்தினால் நம்மை பாவத்திலிருந்து மீட்டுக்கொள்ள சித்தமானது.

"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடமாய் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்" இயேசு (யோவா.12:32). இந்த இயேசுவை விசுவாசித்து அவரை சொந்த மீட்பராக ஏற்றுக்கெள்ளும்போது, "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை" (யோவா.10:28) என்று உறுதியளிக்கிறார். நாம் இயேசுவை விசுவாசித்து அவரது கைகளில் முழுவதுமாக தன்னை ஒப்படைத்துவிடும்போது ஒரு பயமில்லாத சமாதானமிகுந்த மகிழ்ச்சியான வாழ்வினைப் பெறமுடியும். ஏனெனில் ஒருவனும் (பிசாசின் எந்த ஒரு வஞ்சகமான

பெண்கள் பகுதி




# ஓட்டத்தை முடித்தேன் I have finished my Course

J.Glory Arjunan

பவுல் அப்போஸ்தலன் தன் தேகத்தை விட்டுப்பிரியும் காலம் வந்தது எனக் கருதி 'ஓட்டத்தை முடித்தேன்' என்றார் (2தீமோ.4:7). நானோ எனது அரசு பணிக்காலத்தை முடித்தபடியினால் இவ்வுலகப்பணி முடிவடைந்தது என்றெண்ணி 'ஓட்டத்தை முடித்தேன்' என்கிறேன். இது எவ்வளவு ஆசீர்வாதமான நிகழ்வு! என்னுடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும் என்னுடைய முடிவு சம்பூரணமாயிருக்கிறது (யோபு 8:7). ஆம் நான் எனது B.Ed படிப்பினை மதுரை Justin College -ல் (நிர்மலா பள்ளி வளாகத்திற்குள் உள்ளது) முடித்தவுடன் வேலைக்கு விண்ணப்பிக்காமலே அதே கல்லூரியிலிருந்து அங்கிருந்த English Medium School-ல் மாதம் ரூ280/- க்கு (pocket money) பணி யேற்கும்படி ஒரு தந்தி வந்தது. நானும் கர்த்தர் ஏதோ ஒரு நோக்கத்துடன் வாசலை திறக்கிறார் என நினைத்து குறைவான சம்பளத்தைப் பாராதபடி அங்கு சென்று ஒரு மாதம் மட்டும் பணி செய்தேன். அந்த ஒரு மாத பணிக்காலம் இயேசுவின் அன்பினையும் விக்கிரகாராதனையை தேவன் வெறுக்கிறார் என்பதையும் பகிர்ந்து கொள்ளும் இறைப்பணிக்காலமாகவே இருந்தது.

பின்பு கொடைக்கானலில் St.Joseph`s Public School மற்றும் St.Peter`s Matriculation School-ல் கிட்டத்தட்ட நான்காண்டுகள் பணியாற்றினேன். அதன்பின் 1987-ல் அரசு பணி கிடைத்தது. அற்பமாக துவங்கப்பட்ட என் பணி தேனி மாவட்டத்திலுள்ள ஒரு அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியையாக பதவி உயர்வு பெற்று, 2016-ல் 100 சதவீத தேர்ச்சியினை எமது பள்ளிபெற்று எனக்கு நற்சான்றிதலையும் பெற்றுத்தந்தது. 28 ஆண்டுகாலம் பணிபுரிந்து சம்பூரணமாக பணிநிறைவடைந்தது. இது உலகப்பணிதான் என்ன ஆச்சரியம்! எனது தலைமை ஆசிரியை பொறுப்பினை இன்னொரு ஆசிரியையிடம் ஒப்படைத்துவிட்டு HM Room ஐ விட்டு வெளியேறினவுடனே SriLanka Church of Christ லிருந்து 3 நாட்கள் கர்த்தருடைய பணியைச் செய்ய அழைப்பு வந்தது. இதனை கேட்ட நானும் எனது கணவரும் எல்லையில்லா மகிழ்ச்சியில் நனைந்தோம். கர்த்தர் எங்களை நினைத்துக்கொண்டே இருக்கிறார் என்று சொல்லுவதா? கர்த்தரால் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதனை இன்னும் உறுதியாகப் பிடித்துக்கொள்ளுவதற்கான அழைப்பா? அல்லது உலகப்பணி போதும் உன்னதப்பணியினை முழுநேரமாகச் செய்ய Re-emloyment Order கிடைத்தது என்று சொல்லுவதா? அனைத்தும் என்றுதானே சொல்லவேண்டும்.

ஆம், சகோதரியே, எங்கள் இருதயம் பூரிப்பால் பொங்கி வழிகிறது. ஒவ்வொரு நாளும் அழிந்து கொண்டிருக்கிற சகோதரிகளை கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு உட்படுத்தும்பணியல்லவா இது! ஆம், உன்னதமான தேவனையும் அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவிக்கும் பணி அநேகருக்கு நித்திய



தேவனைப்பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருக்கிறது. ஒருவன், தேவன் தன்னை செய்யும்படி கேட்டுக்கொண்டதைச் செய்யாமலிருக்கையில் தேவனுக்கு முன்பாக அவன் எவ்வாறு நல் மனசாட்சியினைக் கொண்டவனாயிருக்க முடியும்? என வினா எழும்புகிறது. நிச்சயமாக இது இயலாது, எனவே தான் தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்புகின்ற விசுவாசியே ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியமாயிருக்கிறது.

இன்னொரு வழியில் இதை ஆராய்கையில்: ஒருவன் வசனத்தின்படி ஞானஸ்நானம் பெறுகையில் தண்ணீருக்குள் அடக்கம்பண்ணப்பட்டு, புதிய ஜீவியம் ஜீவிக்கும்படி தண்ணீரிலிருந்து வெளியே கொண்டுவரப்படுகிறான் (ரோம.6:3,4) அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் புதிய பிறப்பினை அனுபவித்து, ஆவியிலே மறுபடியும் பிறந்தவனாயிருக்கிறான் (யோவா.3:3-5). பவுல் இதை “இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2கொரி.5:17) என விளக்குகிறான்.

இரட்சிப்பையும் புதுச்சிருஷ்டியாய் இருப்பதையும் கொண்டிருப்பதற்கு, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும் மேலும் அதுவே கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பதற்கு நீதியான ஒரே வழியாய் இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல், “கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்” (ரோம.6:3,4) என்றான்.

பவுல், 2கொரிந்தியர்5:17-ல் சொன்னது என்னவென்றால், புதிய சிருஷ்டியாயிருப்பதன் விளைவு புதிய ஜீவியம் ஜீவிப்பது அல்லது கிறிஸ்துவுக்குள் புதிய ஜனமாயிருப்பது என்பதாகும். மறுபடியும் அவன், “நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே” (கலா.3:26,27) என்றான்.

உதாரணமாக, ஒருவன் ஒரு சட்டையை அணிகிறபோது, அவன் சட்டைக்குள்ளிருக்கிறானா அல்லது சட்டைக்கு வெளியே இருக்கிறானா? நிச்சயமாக அவன் சட்டைக்குள்தான் இருக்கிறான். அவ்வாறே ஒருவன் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறபோது, அவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறான். வெளியே அல்ல. இதன் இன்னொரு அர்த்தம் ஒருவன் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய ஒரு குழந்தையாக இருக்கிறான், கிறிஸ்துவுக்கு வெளியே அல்ல.

ஒரு குறிப்பிட்ட நிலையில் ஒரு சமயத்தில் இரட்சிக்கப்பட்டு, பிறகு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம் எனக் கூறுகிறவர்கள் கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது கிறிஸ்து இன்றி இரட்சிக்கப்பட்டவர்களாக இருப்பர். இது எவ்வாறு கூடும்? இரட்சிக்கப்படும்படிக்கு ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும், அது கிறிஸ்துவுக்குள் ஒருவனை கொண்டுசெல்லும் ஞானஸ்நானம் என வேதவாக்கியங்கள் போதித்தால், ஞானஸ்நானத்திற்கு முன்பாக ஒருவன் இரட்சிக்கப்படுவது என்பது இயலாததாயிருக்கும்.

மீண்டும், பவுல் 1கொரிந்தியர்12:13-ல் ஒரே சரீரத்திற்குள் நாம் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம் என்கிறான், மேலும் கொலோசெயர்1:18-ல் சரீரமே சபை என்கிறான். எபேசியர்1:22,23,-ல் சபை சரீரமாயிருக்கிறது எனக்காட்டுகிறான் மேலும் கடைசியாக எபேசியர்4:4-ல் ஒரே ஒரு சரீரம் எனக்குறிப்பிடுகிறான்.

ஆனால் ஒரே சரீரமே சபையானால் அதன் அர்த்தம் ஒரே சபை மாத்திரமே உண்டு என்பதாகும், மேலும் நாம் அந்த சரீரத்திற்குள்ளாக அல்லது சபைக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தால், பிறகு சபைக்குள் பிரவேசிப்பதற்கு ஒரே வழி மட்டுமே உள்ளது: அது ஞானஸ்நானம் பெற்றிருப்பதன் மூலமே! இது எல்லாம் மிகவும் நியாயமானது!

அனைத்து கருத்துக்களையும் ஒன்றிணைக்கையில், நாம் ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படிகையில், நாம் கிறிஸ்துவுக்குள் மேலும் அவருடைய சபைக்குள் பிரவேசிக்கிறோம், ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கின்ற அதே வேளையில் கிறிஸ்து நம்மை தம்முடைய சபையில் சேர்க்கிறார்.

சரீரப்பிரகாரமான உறவில், அதாவது, ஒரு முறை சரீரப்பிரகாரமான ஒரு குடும்பத்தில் நாம் பிறந்திருக்கையில், நாம் அதில் பிறவாதவர்கள் போல் இருக்கமுடியாது. நாம் நமது குடும்பத்தின் விசுவாசமிகுந்தவராகவும், வேலையில் கருத்துள்ள அங்கத்தினனாகவும் அதனுடைய பலன்களைப் பெறுகிறவர்களாக அல்லது ஒருவேளை நாம் வாரிசுரிமையை இழக்கின்ற வழியில் வாழ்கிறவர்களாயிருக்கலாம். ஆனால் நாம் எப்போதும் நம்முடைய தகப்பனுக்கும் தாயுக்கும் மகன் அல்லது மகளாக இருப்போம்.

இதே தான் உண்மையான ஆவிக்குரிய ரீதியிலுமுள்ளது. ஒரு முறை நாம் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபை அல்லது குடும்பத்திற்குள் பிரவேசித்து, எப்போதும் நாம் கிறிஸ்துவுக்குள்ளிருப்போம், மேலும் நாம் எப்போதும் அந்த குடும்பத்தினுடைய அங்கத்தினர்களாக இருப்போம் ஆனால், நாம் விசுவாசமுள்ளவர்களாகவோ விசுவாசமில்லாதவர்களாகவோ இருக்க இயலும். ஆனால் தேவனுடையபிள்ளையாக இருந்து, மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்கையில், கர்த்தர் நமக்கு ஜீவகீரிடத்தைக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார் (வெளி.2:10). நாம் விசுவாசமற்றவர்களாயிருந்தோமானால் குடும்ப பிராந்திய சபையின் மூலம் இவ்வுலகில் ஒருவேளை நட்புறவு கொள்ளாதவர்களாக இருந்து விட நேரிடும். கடைசியாக நாம் மனந்திரும்பாவிட்டால் நித்திய நித்தியமாக இழந்தவர்களாகிவிடுவோம் (மத்.25:46). நாம் நம்முடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கர்த்தரிடத்தில் திரும்புவோமானால், கர்த்தருக்குச் சொந்தமானவர்களுக்கு வரக்கூடிய பலன்களை மீண்டும் பெறுவோம். இந்த ஆவிக்குரிய குடும்ப உறவினை நன்றாகப் புரிந்து கொள்ளும்படிக்கு மனந்திரும்பிய மைந்தனின் கதையை லூக்கா 15-ல் வாசித்துப் பாருங்கள். நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? நீங்கள் அவருடைய சபை அங்கத்தினராயிருக்கிறீர்களா? நீங்கள் தேவனுடைய விசுவாசமிக்க பிள்ளையாயிருக்கிறீர்களா? இல்லையென்றால், இது துக்கரமான உண்மை, நீங்கள் இழந்துபோன நிலைமையிலிருக்கிறீர்கள். தயவுசெய்து அதிக தாமதம் ஏற்படும் முன் கர்த்தரிடம் வந்து சேரும்படி அவருடைய அழைப்பிற்குச் செவிசாயுங்கள்.



உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள்.

"தேவன்தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர்யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின. அங்கே இராக்காலமிராது; விளக்கும், சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார் அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்" (வெளி.20:11-15;21:1-4; 22:5).

**தீர்க்கதரிசன முன்னறிவு**

மனுஷன் ஆதியிலே மகிழ்ச்சியாயிருந்த பூரண நிலையிலிருந்து விழுந்துபோவான், அவன் தன்னுடைய பாவங்களை நிவர்த்தி செய்யும்படி அளிக்கத்தக்கதாக அவனுக்கு ஒன்றும் இராது என்பதை தேவன் அறிந்தவராய் இருந்து மனுஷனுடைய பாவங்கள் மன்னிக்கப்படத்தக்கதாக தேவன் ஆதியிலேயே ஆயத்தம் பண்ணி இருந்தார். தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்ட புத்தகமானது எழுதப்பட்ட பல நூறு ஆண்டுகளுக்கு பின்பு நடக்க இருக்கும் சம்பவங்களை குறித்த முன்னறிவையும், திட்டத்தையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. ஒரு உதாரணத்திலும் தீர்க்கதரிசனம் தவறானதாயிருக்க வில்லை; எந்த ஒரு காரியத்திலும் நிறைவேறாமல் தவறிவிட வில்லை.

தேவனுடைய வழி நடத்துதலின்படி எதிர்காலத்தின் பொதுவான சம்பவங்களையல்ல, குறிப்பிடத்தக்க விளக்கங்கள் தவறாக உணர்ந்து கொள்ளப்படாததாய் இருந்து, தீர்க்கதரிசன புத்தகங்கள் முன்னுரைக்கப்பட்டன.

மேதிய பெர்சிய சாம்ராஜ்யத்தின் எழுச்சி அதை ஆளுகை செய்த முக்கியத்துவம் வாய்ந்தவர்களில் ஒருவராகிய கோரேஸ் என்னும் பெயருடையவர் (ஏசா.44:28; 45:1-14) இந்த சாம்ராஜ்யம் தோன்றுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே முன்னுரைக்கப்பட்டார்.

தெரிந்து கொள்வோம்

## உலகின் சிறிய ஆச்சரியங்கள்!

▶ உலகில் மிகச் சிறிய நகரம் - வாட்டிகன் (பரப்பளவு 110 ஏக்கர்)

▶ உலகளவில் மிகச் சிறிய பெண் - ஜோதி யேம்ஜ் (Jyoti Amge) இவரது உயரம் 584 செ.மீ. இவர் இந்தியாவில் நாக்பூரை சேர்ந்தவர். மேலும் இவர் கின்னஸ் அவார்டு வாங்கியவர் ஆவார்.

▶ உலகளவில் மிகச்சிறிய சமுத்திரம் - ஆர்டிக்கடல் (பரப்பளவு 14,056,000 ச.கி.மீட்டர்) இது பசிபிக் சமுத்திரத்தை விட 10 மடங்கு சிறியது. கிட்டத்தட்ட இரஷ்யாவின் பரப்பளவை ஒத்தது.

▶ உலகளவில் மிகச் சிறிய மனிதன் - சந்திராபகதூர் டாங்கி. (Chandra Bahadur Dangi ) இவரது உயரம் 546 செ.மீ. இவர் நேபாளத்தில் வசிக்கிறார்.

▶ உலகளவில் மிகச் சிறிய கல் - .0003 காரட் வைரமாகும். இது இந்தியாவில் உள்ளது. கண்களுக்குப் புலப்படாத இந்த விலையுயர்ந்த வைரம், தற்பொழுது கைக்கடிகாரங்களில் பொருத்தப்பட்டு வருகிறது.

K.R.K.Ravi Asir, Associate Editor

கருத்துக்களாயிருக்கின்றன.

எதிரிடையாக சொல்வோமானால் வேதாகம வார்த்தைகள் தேவனுடைய அறிவின் அதிகாரத்தோடு ஒலிக்கின்றன. மனுஷனுடைய மரண நேரத்தை குறித்து அது சொல்கிறது, ‘‘நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்’’ என்று இது முற்றிலும் வேறுபாடாய் தோன்றுகின்ற போதிலும், மனித சரீரமானது உண்மையிலேயே நாம் எந்த மண்ணின் மேல் நடக்கிறோமோ அதே மண்ணின் மூலக்கூறுகளால் உருவாக்கப்பட்டதாய் இருக்கிறது! (ஆதி.3:19).

‘‘மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகும்’’ (பிர.12:7).

‘‘அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே (எபி.9:27).

மனுஷனுடைய முடிவில்லா ஆவியானது பாகம் அவனை மற்ற ஜீவ ஜந்துகளிடமிருந்து பிரிக்கிறது, ஏனென்றால் அது தேவனுடைய மேலான ஈவாக இருக்கிறது. ஆத்துமாவை கண்ணால் காணவோ, ருசிக்கவோ, தொடவோ முடியாதென்றாலும், அது இருக்கிறது என்பதை குறித்தும், அதன் அழிவில்லாத தன்மையையும் குறித்து மனுஷர் எல்லாரும் உணர்வுள்ளவர்களாய் இருக்கிறார்கள். மிகவும் பழங்கால மனுஷரும் தங்களுடைய மரித்தோரை பூக்கள், உணவு மற்றும் தாங்கள் பொக்கிஷமாக வைத்திருந்தவைகள் அல்லது தங்களுடைய ஜீவியத்தில் பயன்படுத்தியவைகள் இவைகளோடு புதைத்தது மரணத்துக்கு பின் ஜீவன் உண்டு என்ற அவர்களுடைய நம்பிக்கையையும், சரீரம் மரணம் அடைகின்றபோதிலும், ஆத்துமாவானது தொடர்ந்து ஜீவனுள்ளதாயிருக்கும் என்ற ஜாக்கிரதையுடன் கூடிய அவர்களுடைய அறிவையும் வெளிப்படுத்துகிறதாயிருக்கிறது. ஆத்துமாவானது தன்னை தந்த தேவனிடமாய் திரும்புகிறது சரீரத்தில் அவரவர் செய்த கிரியைகளுக்கான நியாயத்தீர்ப்பை பெற்றுக்கொள்ளும்படியாக என்று வேதவாக்கியங்கள் நமக்குச் சொல்லுகின்றன.

‘‘பின்பு நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின் மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன் அவருடைய சமுகத்திலிருந்து பூமியும், வானமும் அகன்று போயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை.

‘‘மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன, ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரமும் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும், பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்’’


‘‘பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும் பரலோகத்திலிருந்து



## பாடம் -19 வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரவாளிகள்

## Heirs According to the Promise - *Jerry Bates*

**-சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**




1. இரட்சிக்கும் விசுவாசம் குறிப்பிட்ட சில கீழ்ப்படியும் செயல்பாடுகளை உள்ளடக்கியது. ஆனால் அந்த கீழ்ப்படிதலான செயல்கள் நம்முடைய பலனைக் கொடுப்பதில்லை.

2. எவ்வளவு நற்கிரியையானாலும் நம்மை கிறிஸ்துவிடம் ஒருபோதும் கொண்டு வருவதில்லை.

3. சட்ட முறைகள் நியமங்களைக் கொடுக்கின்றன (அளவுகள்) அவைகள் மீறப்படும்போது மக்களை சட்டத்தை மீறியவர்களாக்குகிறது. நீதிமா ன்களாக அல்ல கடுமையான சட்ட முறைகளைச் சார்ந்து நாம் நம்முடைய செயல்களை நம்பியிருக்க முடியாது.

4. இயேசுவின் மூலமாக கிடைக்கப்பெறும் கிருபையே பாவிகளை நீதிமான்களாக்கும்.

5. கிரியைகளில்லாத விசுவாசம் மதிப்பற்றது (11:6) செயல்பாடுகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கும் (யாக்.2:24).

எடுத்துக்காட்டுகள் (எபி.11)
ஆபேல் தன் பலியை செலுத்துகிறான் (வசனம் 4)
ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான் (வசனம் 5)
நோவா பேழையை உண்டுபண்ணினான் (வசனம் 7)
ஆபிரகாம் கீழ்ப்படிந்து தன் வீட்டை விட்டுச் சென்றான் (வசனம் 8)
சாராள் கற்பமுற்றாள் (வசனம் 9)
ஆபிரகாம் ஈசாக்கை பலியாக ஒப்புக்கொடுத்தான் (வசனம் 17)
யோசேப்பு தன் எலும்புகளைக் குறித்த கட்டளைகளைக் கொடுத்தான் (22)
மோசேயின் பெற்றோர்கள் அவனை மறைத்து வைத்தார்கள் (வசனம் 23)
மோசே பார்வோன் மகளின் குமாரனென்று அழைக்கப்பட மறுத்தான்
மோசே எகிப்தை விட்டுச் சென்றான் (வசனம் 27)
மோசே பஸ்காவை ஆசரித்தான் (வசனம் 28)
இஸ்ரவேல் மக்கள் செங்கடலைக் கடந்து சென்றார்கள் (வசனம் 29)
எரிகோவின் மதில்களைச் சுற்றிய இஸ்ரவேலர்கள் (வசனம் 30)
ஒற்றர்களை ராகாப் மறைத்து வைத்தாள்
கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றார்கள்

1. **அதனால்** என்ற இணைப்பு வார்த்தையைப் பாருங்கள் நாம் எப்படி விசுவாசத்தினாலே தேவனுடைய பிள்ளைகளானோம் என்பதை விளக்கிச் சொல்கிறது.

2. 3:26 நிகழ்கால வாக்கியம் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பது கடந்தகாலத்தை குறிப்பது. இப்பொழுது நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள். (நிகழ்கால வாக்கியம்) ஏனென்றால் நீங்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டீர்கள் (கடந்த கால வாக்கியம்).

3. ஞானஸ்நானம் நம்மைக் கிறிஸ்துவுடனே கூட அவருடைய மரணத்தோடு அவருடைய உயிர்த்தெழுதலோடு கூட இணைக்கிறது (ரோ.6:3-8).

4. பவுலின் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு விசுவாசம் மட்டுமே (இரட்சிக்கும்) என்கிற உபதேசத்தை அநேகர் போதிக்கிறார்கள்.

5. ஒருவர் ஞானஸ்நானத்தை அவசியம் என்று போதித்தால் அது கிரியையாதலால், பவுல் நீதிமானாக்கப்பட வில்லை என்கின்றனர்.

6. அவருடைய விளக்கத்தின்படி இரட்சிப்புக்கு முன் நிகழ்கின்ற எதுவுமே கிரியையல்ல. இரட்சிப்புக்குப்பின் நிகழ்வது கிரியையாதலால் அது முக்கியமானதல்ல. மனந்திரும்புதல் கிரியையல்லவா? அது உண்மையில் மனந்திரும்பினால் ஏற்படும் எந்தச் செயலும், கிரியையும் தேவையற்றது.

7. பவுல் தன்னில் தானே முரண்பட இது காரணமாகிறது ரோம.2:7-ல் பவுல் சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையும் கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார் என்கிறார்.

8. ரோமர் 6:17,18

9. இரட்சிப்பு "கிறிஸ்துவுக்குள்" இருக்கிறது (2தீமோ.2:10). ஞானஸ்நானம் ஒருவரை கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது. இந்த "குள்" என்று சொல்லப்படும் முன்னிலை யாக்கப்பட்டது எப்போதுமே உருவில் அல்லது செயலில் மாற்றத்தை உள்ளடக்கியதாகும்.

10. ஞானஸ்நானம் என்பது தன்னில்தானே பாவத்தைப் போக்குவதில்லை. அது கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் செய்யப்படும் செயலைப் பொறுத்தது. ஆனால் அது எப்போது தேவன் நம்முடைய பாவத்தை மன்னித்து புதிய சிருஷ்டியாக்குகிறார் என்பதைச் சொல்லுகிறது.

1. ஒருவன் கிறிஸ்தவனாகும்போது அவன் தன் பழைய வாழ்க்கையின் வஸ்திரங்களைச் (செயல்களை) களைந்து போட்டுவிட்டு கிறிஸ்துவின் மனப்பான்மைகளையும், சேவை மனதையும் தரித்துக்கொள்ளுகிறான். கிறிஸ்துவைப்போல நாம் சிந்திக்கத் துவங்குகிறோம்.

2. கிறிஸ்துவை தரித்துக் கொள்ளாமல் (முற்றிலும் மனதில் எடுத்துக் கொள்ளாமல்) ஒரு நபர் இரட்சிக்கப்பட முடியுமா? ஞானஸ்நானத்திற்கு முன் இரட்சிக்கப்பட்டால் கூடும். ஏனெனில் ஞானஸ்நானத்தில் ஒருவன் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுகிறான் என்று பவுல் சொல்லுகிறார்.

3. வடிவமைப்பாளருடைய எந்த முத்திரையும் (அர்மானி, குக்கி) இந்த அடையாளத்தோடு ஒப்பிடப்பட முடியாது. ஏனென்றால் நாம் இப்போது பாவமன்னிப்பு இரட்சிப்பு ஆகிய வஸ்திரங்களால் உடுத்துவிக்கப்பட்டிருக்கிறோம்.

4. சில சமயம் மக்கள் தாங்கள் அறிகிற முத்திரையின் மூலம் தங்களை யாரென்று காட்டிக்கொள்ள உதவுமென்று நினைக்கிறார்கள்.

5. நாம் கிறிஸ்தவர்களென்று முத்திரையிடப்பட வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் அந்த முத்திரையை பெருமையுடன் அணிந்துகொள்ளவேண்டும். நாமெல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறோம் (3:26,28,29). நாமனைவரும் ஒரே சரீரத்துக்குள் ஒன்றாக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவுக்குள் நாம் அனைவரும் தேவனுடைய குடும்பத்துக்கு சொந்தமாயிருக்கிறோம்.

1. எபேசியர் 4-ல் ஒரே சரீரமும் ஒரே ஞானஸ்நானமும் உண்டு என்கிறார்.

2. இன்று பலவிதமான ஞானஸ்நானங்கள் கொடுக்கப்பட்டு மக்களை பலவிதமான சபைகளில் சேர்க்கின்றனர்.


3. அந்த ஒரே சரீர ஞானஸ்நானம் பாதி சொந்தமான சகோதரனையோ, சகோதரியையோ உண்டாக்காமல் இயற்கையில் ஒன்றுமையாயிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை உண்டாக்குகிறது. உண்மையான கிறிஸ்தவத்தில் தவறுகளோ, தடைகளோ கிடையாது. இந்த சத்தியம் அனைவராலும் போற்றப்பட வேண்டும்.

1. நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டதால் நாமனைவரும் ஆபிரகாம் மற்றும் வாக்குத்தத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம்.

2. நாம் அனைவரும் வாக்குத்தத்தின் பிள்ளைகளாயிருக்கும்படி ஆசைப்பட வேண்டும். சுதந்தரவாளியாயிருப்பதற்கு நாம் விசுவாசித்து மனந்திரும்பி, அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெறவேண்டும்.




# எது தேவனுடைய புத்தகம்?
## Which Is God`s Book?
*-Betty*



பெண்கள் பகுதி

-சென்ற மாத இதழின் தொடர்ச்சி




**1. அறியப்பட்டிருக்கிற விஞ்ஞானத்தின்படி விபத்துகள் குழப்பத்தை மட்டுமே உருவாக்குகின்றன.** இது சந்தேகத்திற்கிடமில்லாத ஒரு உண்மையாய் இருக்கிறது. இந்த சட்டத்திற்கு விதிவிலக்காக எப்பொழுதும் எதுவுமே இல்லை.

2. மேலும் விஞ்ஞானத்தில் அறியப்பட்டிருக்கிறபடி வெப்ப சக்திக்கும், இயந்திர சக்திக்கும் உள்ள தொடர்பைப் பற்றிய இயற்பியல் பிரிவின் இரண்டாம் விதியின் (Second Law of Thermo dyanamies) படி தனியாக விடப்பட்ட எந்த ஒன்றும் மோசமான நிலைக்கு விருத்தியடைந்து, ஒரு தாழ்ந்த நிலையையும் ஒழுங்கில் குறைவான நிலையையும் அடையுமே தவிர ஒரு உயர்ந்த நிலையை அடையாது. எல்லா காரியத்திலும் வேலையாள் மறுக்க முடியாத வகையில் இளைப்படைந்து போகிறார். அநேகவருஷங்கள் ஜாக்கிரதையாக விலைமதிக்க முடியாதபடி பணியாற்றி ஒரு கோதுமை வகையை செயற்கையாக முன்னேற்றமடைய செய்தாலும் அத்தகைய ஒரு காரியம் வெறுமனே ஒரு விபத்தின் விளைவாகவோ அல்லது எளிமையான இயற்கை மாற்றம் மாறாமல் ஒருபோதும் நடந்ததில்லை, அது காலத்தையும் "இயற்கையையும்" விட்டு விலகியதாயிருந்து சகலகாரியங்களும் மிகவும் மோசமானவைகளாயின.

3. வாழ்க்கை வரலாற்றில் ஒருபோதும் ஜீவனில்லாத ஒரு பொருள் ஜீவனை வழங்கியதில்லை. இன்றைய உலகில் ஜீவனை நிலைநிறுத்தும்படியாக, அங்கே ஏதோ ஒன்று ஏற்கெனவே மற்ற வஸ்துகளுக்கும் ஜீவனை அளிக்கத்தக்க வல்லமையுடைய ஏதோ ஒன்று ஜீவித்திருக்கவேண்டும். இந்த ஜீவனானது ஜீவனிலிருந்துதான் வரவேண்டும் என்று விஞ்ஞான விதியானது உரிமையுடன் உரைக்கிறது. ஆகையால் தேவன் ஒருவரே, அவருக்குள் ஜீவன் வாசம் பண்ணுகிறதென்பது இயற்கையாய் அமையப்பெற்ற காரியமாய் இருக்கிறது (யோவான் 5:26) அவர்தாமே தாம் சொன்னபடியே மனுஷன் ஜீவனோடிருக்கும்படி கொண்டுவந்தவராயிருக்கிறார்.

மனுஷன் எப்படி வந்தான் என்ற குறிப்பை வேதாகமமானது விவாதிக்கிறதில்லை. மனுஷன் பூமியின் மண்ணினாலே உருவாக்கப்பட்டான், தேவன் அவனுடைய நாசியிலே ஜீவ சுவாசத்தை ஊதினார். அவன் ஜீவாத்துமாவானான் (ஆதி.2:7) என்று அது குறிப்பிடுகிறது. மனுஷன் எப்படி ஒரு ஜீவனுள்ளவன் ஆனான் என்று தேவன் எளிமையாகவும், அழகாகவும் வெளிப்படுத்தி அவருடைய புத்தகத்தில் சொல்லியிருக்கிறது போல, வேறெந்த பதிலும் திருப்திகரமானதாக இருக்கிறதில்லை.

மனுஷன் இந்த உலகத்தைவிட்டு நீங்கிய பின்பு என்ன ஆவான் என்பதையும் வேதாகமம் நமக்கு அறிவிக்கிறது. வேறெந்த புஸ்தகமும் மரணத்தின் வாசலை ஊடுருவிச் சென்று நம்பத்தகுந்த பாஷையிலே அதற்கு அப்பால் என்ன இருக்கிறது என்று விவரிக்கவில்லை. பல மார்க்கங்கள் மூலமாக வந்ததிரளான கதைகள் எளிதாக புரிந்து கொள்ளப்படத்தக்க வகையில் அவைகள் மனுஷரால் பரப்பப்பட்ட தெளிவில்லாத